76

# வச்சிரசூசி.

இஃது

பிராமணர்சாதிக்கிற

சாதிபேதக் கோட்பாட்டைக் கண்டிக்கும்படி

அசுவகோசர்

செய்த சமஸ்கிருதநூலினின்று

மொழிபெயர்க்கப்பட்டது.

இயாழ்ப்பாணப் புத்தக சங்கத்தாரால் பிரஸ்தாபம்
பண்ணப்பட்டது.

இயாழ்ப்பாணம், மானிப்பாய்:

அமெரிக்கன் மிஷன் அச்சுக்கூடத்திற் பதிக்கப்பட்டது.

௲௮௱௫௧.

J. R. T. S.] GENERAL SERIES. [No. 87.

---

Vajra Suchi; The Needle of Adamant; or the Original Divine Institution of Caste. Examined and refuted by the Budhist Pundit Ashwaghosha.

---

1st Ed.] American Mission Press, Manepy. [2000.

# முகவுரை.

இமய கிரியைச்சேர்ந்தநேபாலிராச்சியத்திலிருந்தபௌத்தவித்துவான்களுக்குள் கல்வி அறிவினாலே சிறந்து நன்கு மதிக்கப்பட்டபண்டிதரும், சிலபெருநூல்கள்செய்தவருமாகிய அசுவகோசரென்னும் பெயரையுடைய பௌத்தகுரு சமஸ்கிருதபாஷையிலே செய்தவச்சிரசூசியென்னும் இந்த நூல், இந்துமத ஆசிரியரின் நூல்களையே மெய்மையெனக் கொண்டு, அவைகளினின்றே பிரமாணங்களை எடுத்து, பிராமணர் எல்லாருக்கும் வற்புறுத்தும்படி காட்டி, இந்துமதத்தார், சாதிபேதம் ஆதியிலே கடவுளின் வழியாகத் தோன்றினதென்றுகொண்ட கோட்பாட்டைக் கண்டித்துப் பேசுகின்றது. சமஸ்கிருதத்தினின்று தமிழிலே பெயர்க்கப்பட்ட இந்த மொழிபெயர்ப்பு, தமிழ்நாட்டிலுள்ளவர்கள் தாங்கள் கைக்கொண்டுவருகிற சாதிபேதக்கோட்பாடு தங்கள் சாஸ்திரப்பிரமாணங்களுக்கு விரோதமென்பதை உய்த்துணர்ந்து முந்தின அறியாமையை நீங்கி, அறிவில் அதிகரிப்பதற்கு உபயோகமாயிருக்குமென்று கருதி, கிறிஸ்துமார்க்கபுத்தகசங்கத்தார் இதை அச்சிற்பதிப்பித்தார்கள்.

# வச்சிரசூசி.

---

அசுவகோசர் என்னும் பெயரையுடைய நாம், உலோக குருவாகிய நமது மஞ்சகோசரை மனோவாக்குக் காயங்களினாலே சிந்தித்துத் துதித்து வணங்கி, சாதிப்பிராந்தியைக் குத்தும் வச்சிரசூசியென்னும் இந்தப் பிரபந்தத்தைச் சாஸ்திரசம்மதப்படி செய்யத் தொடங்குகிறோம்.

உங்கள் சுருதி ஸ்மிருதி இதிகாச புராணமுதலானவைகளை உங்களைப்போலவே நாமும் ஆத்துமார்த்தத்தைப்போதிக்குஞ் சாஸ்திரங்களென்றுபற்றிக்கொண்டு, அவைகளிலுள்ள பிரமாணங்களைக்கொண்டே இதிலுள்ள யாவையுஞ் சாதிப்பதல்லாமல் அவையில்லாமல் ஒன்றையுஞ் சாதிக்கமாட்டோம்.

பிராமணர்களே, பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வருணமென்னும் நான்கு வருணத்துக்குள்ளும் பிராமணவருணமே சிரேஷ்டமென்று சாதிக்க விரும்புகிறீர்கள் : இதுவே உங்கள் கோட்பாடு.

ஆதலினால், முதல் நாம் பிராமணத்துவம் இன்னதென்று அறியும்படி, ஒருவனைப் பிராமணனென்பது அவனுடைய சீவனினாலோ, பிறப்பினாலோ, சரீரத்தினாலோ, பிரமஞானத்தினாலோ, சமயாசாரத்தினாலோ, தொழிலினாலோ, வேதபாராயணத்தினாலோ என்பதை ஆராய்ந்துபார்ப்போம்.

## க. சீவவிசேஷத்தினாலே பிராமணத்துவம் இல்லை என்பது.

ஒருவனைச்சீவனாலே *பிராமணனென்பது கூடாதென்ப.

---

*சீவனென்பது, இந்துமத வேதாந்திகளுடைய கோட்பாட்டின்படி சமஸ்தபொருள்களுக்கும் பிராணனாயுள்ள பிரம்மத்தினின்று தோன்றிச் சீவிப்பதும், இயங்குவதும், உணர்வதுமாகிய ஆத்துமாவாம். தேவர், மனுஷர், மிருகம், ஊர்வன, கிருமி, மரம், பயிர்முதலிய உயிருடைய பொருள்களில் ஒவ்வொன்றும் இதின் அதிசூட்சுமமான அம்சமுடையது. அன்றியுஞ் சடப்பொருள்களிலும் இதுசேட்டிக்கும். மகத்தாகிய இந்த ஆத்துமாவின் அம்சம் ஒவ்வொன்றும், இடைவிடாமல் ஒருசரீரத்தை விட்டு மற்றொருசரீரத்திலேபிரவேசிக்கும். ஒருகால்தேவனும், ஒருகால்

தற்குப்பிரமாணம்—வேதத்திலே "சூரியபகவான்* ஒருகாலம் மிருகமாயிருந்தான்"-எ-ம், "சுவர்க்காதிபதியாகிய இந்திரனும் முன்னே மிருகமாயிருந்தான்"-எ-ம், "பிராமணகுலம் என்னும் வருணபேதமில்லாதிருந்தும் சீவனுள்ளவைகளாயிருக்கிற பற்பல மிருகசெந்துக்கள் பின் தேவதைகளாயின"-எ-ம், "அம்மிருகங்களை இந்நாள் வரைக்குந் தேவர்களென்று ஆராதனைசெய்து வருகிறார்கள்"-எ-ம், "நீசராகிய சுவபாகர்களும்† தேவரானார்கள்"-எ-ம், சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், சீவனாலே ஒருவனைப்பிராமணனென்று சொல்லலாகாதென்பது, இந்த வேதப்பிரமாணங்களினாலே சாதிக்கப்படுகின்றது.

---

மனுஷனும், ஒருகால் மிருகமும், ஒருகால் இராசாவும், ஒருகால் யாசகியும், ஒருகால் பிராமணனும், ஒருகால் சூத்திரனும், ஒருகால் புருஷனும், ஒருகால் ஸ்திரீயும், ஒருகால் அழகிலியும், ஒருகால் அழகுடையவனும், ஒருகால் விவேகியும், ஒருகால் அவிவேகியும், ஒருகால் சற்குணனும், ஒருகால் துர்க்குணனும், ஒருகால் தரித்திரனும், ஒருகால் செல்வனுமாக வெவ்வேறுரூபங்களையெடுத்து, பூருவசென்மத்திலேசெய்த நல்வினை தீவினைகளின்படி இன்பதுன்பங்களை அநுபவித்தும். இப்படிப்பிறந்திறந்து, நல்வினை தீவினையும் விருப்புவெறுப்புமின்றி மேன்மேலுஞ் செநநம் எடாமல், தனக்கு ஆதாரமாகிய பிரமத்திலே தோன்றுந் துவிதபாவனையும் தற்போதமுமிழந்து, தானேயாவுமாய் விளங்கும் பிரமத்துடன் ஐக்கியமாகும்.

*சூரியன், இந்துக்கள் தங்கள் பற்பல தேவர்களுக்கும் ஆதாரமென்று நினைத்துவணங்கும் பெரியதேவன் என்பது, சந்தேகிக்கப்படாத சில பிரமாணங்களாலும்நியாயங்களாலுஞ்சாதிக்கப்படும். இப்படியிருக்க, அந்தச் சூரியன் இழிவாகிய ஒரு மிருகசென்மத்தை எடுத்ததாதலால், யாவனாகிலுஞ் சீவனைக் கொண்டுதன்னைப்பிராமணனென்றுமேன்மைபாராட்டுவது தகாததே.

†இவர்கள் சண்டாளருக்கொப்பாகிய ஈன சாதியார். சுவபாகன் உக்கிரஸ்திரீயினிடத்திலே சத்திரியனுக்குப்பிறந்தவன். உக்கிரஸ்திரீ சூத்திரஸ்திரீயினிடத்திலே சத்திரியனுக்குப் பிறந்தவள். இந்தச் சாதியார் தங்கள் தேசத்திலுள்ள உயர்ந்த சாதியாரால் அவமதிக்கப்படுவோர்கள். இவர்கள் மற்றைச் சாதியாருடன் சம்பந்தமின்றி, உடைந்த பாண்டங்களிலே போசனம்பண்ணி, பிரேதங்களின் வஸ்திரங்களைத் தரித்து, குரங்கையும் நாயையும்வைத்துக்கொண்டு நகரத்துக்குப்புறம்பே வசிப்பார்கள். சுவபாகர், தலையாரிகளாகவும், குற்றமின்றி மரித்தவர்களைக் காவிக்கொண்டுபோய் மரணச்சடங்கு செய்கிறவர்களாகவும் நியமிக்கப்படுவோர்கள். இப்படி நியாயம் உறுதிகொண்டிருக்க;

அன்றியும் இந்துமதத்தார் யாவராலும் மேன்மையானதென்று அங்கிகரிக்கப்படும் மகாபாரதத்தில்* "ஏழு வேடரும், காலஞ்சலபருவதத்தைச் சார்ந்த காட்டிலிருந்த பத்து மான்களும், இமயமலையின் மானதவாவியிலிருந்த சில அன்னங்களும், சரதீவிலிருந்த† சில சக்கரவாகங்களும், பின்பு குருக்ஷேத்திரத்திலே‡ வேதபாராயணஞ்செய்யும் பிராமணராகப்பிறந்தன என்று பேசப்பட்டிருக்கின்றது. பிராமணருக்கு மாத்திரமா சீவன், அது எல்லாமனுஷருக்கும் எல்லாமிருகங்களுக்கும் உண்டே. ஆதலால், இந்த மகாபாரதப் பிரமாணத்தின்படியே வேடரும், மான்களும், அன்னங்களும், சக்கரவாகங்களும் பிராமணராய்ப்பிறந்ததினால், பிராமணத்துவஞ் சீவவிசேஷத்தினால் அல்ல என்பது பிரத்தியட்சமாய் விளங்கும்.

இன்னும் மகாமுனிவரும், தருமசாஸ்திரத்தலைவரும் சிருஷ்டிகர்த்தாவானபிரம்மாவின் புத்திரருமாகிய மநு என்பவர் செய்த மாநவதருமம் என்னு நூலில், "நாலுவேதங்களையும்§

---

இந்த ஈனசாதியார்கள் தேவர்களாகுதல் ஒத்த பிறப்பினையுடைய மனுஷருக்குள்ளே சூத்திரனுக்குக் கீழ்மையும் பிராமணனுக்கு மேன்மையும் உண்டா!

* இது தெய்வீகவாக்கென்று மதிக்கப்படும் இந்துக்களுடைய திவ்விய காவியங்களுள்ஒன்றாகியும் ஒருலட்சத்துக்கு மேற்பட்ட சுலோகமுள்ளதாகியும் மேன்மைபொருந்திய பகவற்கீதையைத் தன்னிடத்துடையதாகியும் இருக்கின்றது.

† இந்த பூமியிலுள்ள வெவ்வேறுசமுத்திரங்களாலே சூழப்பட்ட ஏழுதீவுகளுக்குள்ளே தயிர்க்கடலாற் சூழப்பட்ட தீவு. அத்தீவுகள் பூமியின் மத்தியினின்றும் சம்பு, குசை, பிலாக்கிய, சான்மலி, கிரௌஞ்சம், சாகம், புட்கரம் என்றெண்ணப்படும். கடல்கள் ஏழாவன; உப்புக்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல், நன்னீர்க்கடல் என்னுமிவைகளே. நாம்வாசம்பண்ணுகிறதேசமே சம்புத்தீவு. மற்றத்தீவுகளை ஒருவருங் கண்டதில்லை. அவைகள் முழுமையும் பொய்யென்றுதோன்றுகின்றது. ஆகிலும் இது தெய்வவாக்கென்று மதிக்கப்படும் புவனசாஸ்திரத்திலே பேசப்பட்டிருக்கின்றது.

‡ நூதன தெல்லியைச் சூழ்ந்திருக்கிற இந்தத்தேசம், குருகுலத்தாரும் பாண்டவரும் மகா யுத்தஞ்செய்த இடம்.

§ இவைகள் இக்காலத்தில் வழங்காத பழைய சமஸ்கிருதபாஷையிலிருந்த இந்துக்களுடைய மகாபரிசுத்தநூல்கள். இவைகளிலே பிராமணத்துவத்துக்குரியயாவுஞ்சொல்லப்படும். முன்

அவைகளின் அங்கோபாங்கங்களோடும்* கற்றறிந்த பிராமணனாகிலும், சூத்திரஸ்திரியினிடத்திலே தானம் வாங்கினால், அவன் பன்னிரண்டுசென்மங் கழுதையாகவும், அறுபது சென்மம் பன்றியாகவும், எழுபது சென்மம் நாயாகவும் பிறப்பானென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த மானவதருமசாஸ்திரப் பிரமாணத்தினாலும் பிராமணத்துவஞ் சிவவிசேஷத்தில் அல்லவென்பதே துணிவு.†

## ௨. பிறப்புவிசேஷத்தினாலே பிராமணத்துவம் இல்லை என்பது.

பிறப்பினால் ஒருவன் பிராமணனாவது கூடாதென்பதற்குப் பிரமாணம், ஸ்மிருதிகளில்‡ "அசலமுனி யானையின் புத்திரன்"—எ-ம், "கேசபிங்கல§ முனிவர் ஈத்தினிடத்திலே தோன்றினவர்"—எ-ம், "அகஸ்தியர்|| அகஸ்திப்புஷ்பத்தி

---

னே இவைகள் பிரம்மாவாற்சொல்லப்பட்டன. அப்படியே நெடுங்காலம் பாரம்பரையாகக் காணப்பட்டு வந்தபின் வியாசமுனிவர் அவைகளை ஒருங்கே சேர்த்து இக்காலத்தில் வழங்குகிறபிரகாரம் ஒழுங்குப்படுத்தினார். இதினால் அவருக்கு வேதவியாசரென்னும்பெயர் உண்டாயிற்று.

* இவைகள் வியாகரணஞ் சோதிடமுதலிய வழிநூல், சார்புநூல்களாம்.

† இப்படி அல்லாதிருந்தால்; அவன் தன்பிராமணத்துவத்தை இழப்பதுமில்லை, முன்னே பிராமணராயிராத சுவபாகரும், சக்கரவாகங்களும், மான்களும் பிராமணத்துவம் அடைவதுமில்லை.

‡ இவைகள் அதிகாலத்திலே மநு யாக்ஞவற்கியர்முதலானவர்களால் வாய்மொழியாகச் சொல்லப்பட்ட தருமசாஸ்திரத்திரட்டுகள். இவர்களுடைய சீஷர் இவைகளை ஞாபகத்தில்வைத்திருந்து பின்னே எழுதியபடியால் இவைகளுக்கு ஞாபகமென்று பொருள்படுகின்ற ஸ்மிருதியென்று பெயராயிற்று.

§ இவர்சுத்தாத்துமாவும் முனிவரும் ஒரு சத்தசாத்திரகர்த்தாவுமாயுள்ளவர்.

|| இக்குமுனிவர் மகிமையுள்ளவரென்றும், சூரியனுக்கும் வருணனுக்கும் பிறந்தவரென்றும் இராமசரித்திரத்திற் சொல்லப்படுகின்றது. சிலர்சுவர்க்கத்திலுள்ள உருப்பசியென்னுங் கணஸ்திரியினிடத்திற்பிறந்தவரென்றும், வேறுசிலர் மண்குடத்திற்பிறந்தவரென்றுஞ் சொல்லுகிறார்கள். இவர் ஒருமுறை சமுத்திரந் தமக்குவிரோதஞ்செய்தபடியால் கோபங்கொண்டு அதைக்குடித்தார். விந்தமலை இவர்கட்டளைப்படி பாதாளத்திலேதாழ்ந்து கிடக்கின்றது.

லேதோன்றினவர்"—எ-ம், "கௌசிகமுனி குசையென்னுங்கருப்பையிலே* தோன்றினவர்"—எ-ம், "கபிலர்† கருங்குரங்கின் புத்திரர்"—எ-ம், "கௌதமர்‡ குதாலமரத்திலேதோன்றினவர்"—எ-ம், "துரோணாசாரியர்§ குடத்திலேதோன்றினவர்"—எ-ம், "தைத்திரியமுனிவர்|| கௌதாரியினிடத்திலே தோன்றினவர்"—எ-ம், "பரசுராமர்¶ பூதாளியிலேதோன்றினவர்"—எ-ம், "வியாசமுனிவர்** வலைச்சிவயிற்றிலே பிறந்தவர்"—எ-ம், "சுகிகமுனிவர் நான்காம்வருணத்திலுள்ள ஸ்திரியினிடத்திலே பிறந்தவர்"—எ-ம், "விசுவாமித்திரர்†† சண்டாளஸ்திரியினிடத்திலே பிறந்தவர்"—எ-ம், சொல்லப்பட்டிருக்கின்றது.

இவர்களில் ஒருவரையாவது பிராமணஸ்திரிபெற்றதில்லை. ஆகிலும், இவர்கள் எல்லாரும் பிராமணரென்றே யாவராலும் அங்கிகரிக்கப்படுகிறார்கள். இந்த ஸ்மிருதிப்பிரமாணத்திலே, பிறப்பினால் ஒருவன் பிராமணனாகான் என்பதை அறியலாம்.

ஒருவனுக்கு மாதா பிராமணஸ்திரி அல்லாதிருந்தாலும், பிதா பிராமணனாயின் அவன் பிராமணனாவானென்று சொல்

---

* இது சமய சமுஸ்காரங்கள் யாவிலும் பிரயோகிக்கப்படும் பரிசுத்தமாகிய ஒருவகைப் புல்லு.

† இவர் பிரம்மாவின் புத்திரராகிய கர்த்தமருக்குத் தேவகூதியினிடத்திற் பிறந்த சத்தாத்துமா. இவர் சாங்கியமென்னும் ஒரு நூல்செய்திருக்கிறார்.

‡ இவர் நியாயசாஸ்திரஞ்செய்தவர்.

§ இவர் பாரத்துவாசருடைய புத்திரர்; பாண்டவருடைய ஆசாரியர்.

|| இவர் தைத்திரி என்னும் யசுர்வேதத்தைப் போதித்தவர்களில் ஒருவர்.

¶ இவர் இராமர் மூவரில் ஒருவர். விஷ்ணுவின் ஆறும் அவதாரமாகிய இவர் கொடுங்கோல் அரசரைப் பூமியினின்று நாசமாகும்படி சங்கரிக்கத் தோன்றிய வீரனானவர்.

** இவர் வேதமும் புராணமுஞ் செய்தவர், வேதாந்தசாஸ்திரத்தை ஸ்தாபித்தவர்.

†† இவர் கனூசதேசத்தின் இராசாவாகிய காதியின்புத்திரர். இம்முனிவர் முன்னே சத்திரியர், பின்னே நெடுங்காலம் மகாதவங்களை முயன்றுசெய்து பிரமரிஷிகளாகிய சத்தரிஷிகளுள் ஒருவரானார். இன்னும் இவர் பிரமாவினாலே முதற்சிருஷ்டிக்கப்பட்டவர்களும் மனுஷரின் பூருவபிதாக்களுமாகிய தசப்பிரசாபதிகளிலும் ஒருவர்.

லுவீர்களாகில், பிராமணருக்கு அவர்கள் அடிமைப்பெண்களிடத்திலே பிறந்த பிள்ளைகளும் பிராமணராகவேண்டுமே. இது உங்களுக்குச் சற்றுஞ் சம்மதமில்லை. ஆகிலும், பிராமணனுக்குப் பிறந்தவன் மாத்திரம் பிராமணனென்று சொல்லுவீர்களாகில், இக்காலத்தில் யதார்த்தமான பிராமணர் இல்லையென்று சாதிக்கிறோம். பிராமணரால் விவாகம் பண்ணப்பட்ட பிராமணஸ்திரிகள் அநேகர், சூத்திரரோடுஞ் சையோகிப்பதினால், அவர்கள் பிள்ளைகளில் இன்னார் பிராமணரென்றும் இன்னார் சூத்திரரென்றும் நாம் அறியமுடியாதே, ஆதலால், ஒருவன் பிறப்பினாலும் பிராமணன் ஆகக் கூடாது.

இன்னும் மாநவதருமநூலிலே "பிராமணன் மாமிசபோசனஞ்செய்தால் அக்கணமே நீசனாவான்"—எ-ம், "லாடசாவும் உப்பும் பாலும் விற்கும் பிராமணன் மூன்று நாளிலே சூத்திரனாவான்"—எ-ம், "ஆகாயகமனஞ்செய்யவல்ல பிராமணரும், மாமிசபோசனஞ்செய்தால் நீசராவார்கள்"—எ-ம், "இதினாலே பிராமணர் மாமிசபோசனஞ்செய்யலாகாது" —எ-ம், சொல்லப்படுகின்றது. இந்த மாநவதருமசாஸ்திரப்பிரமாணத்தினாலே, பிறப்பினாலேமாத்திரம் ஒருவன் பிராமணனாதல் கூடாது என்பது தெளிவாய் விளங்குகின்றது. பிராமணத்துவம் பிறப்பினாலாவதெனில், அது ஒருபொழுதுங் கெடமாட்டாதே. குதிரை தனக்கேற்ற சாதுவான குணத்தை விட்டுத் துஷ்டகுணமுள்ளதாய் மாறினாலும் ஒருபொழுதும் பன்றியாகாதே.

## ௫. சரீரவிசேஷத்தினாலே பிராமணத்துவம் இல்லை என்பது.

ஒருவன் சரீரத்தினாலேபிராமணனாதல் கூடாது. கூடுமாகில், அவனுடைய சரீரத்தைத் தகிக்கும் அக்கினியுடன்* அந்த அக்கினியைக்கொளுத்தும் அவன் சிநேகிதர்களும் சுற்றத்தார்களும் பிரமகத்தி அடையவேண்டும்.

க்ஷத்திரிய வைசிய சூத்திர ஸ்திரிகளிடத்திலே பிராமணருக்குப்பிறந்த புத்திரரும் பிராமணவிந்துவாதலால் பிராமணராகவேண்டும். அப்படி ஒருவருஞ் சாதிப்பதில்லையே.

---

* இதை இந்துக்கள் பரிசுத்தமுந் தெய்வீகமுமானதென்றும், சமஸ்த வஸ்துக்களையுஞ் சுத்திசெய்வதென்றும், நன்குமதிக்கிறார்கள்.

ஒருபிராமணனுடைய சரீரம் அழியுமிடத்து, சரீரத்துடனிருந்தபொழுது அவன் அனுஷ்டித்த ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் புண்ணியத்தொழில்களின் பலனும் இல்லாதழியவேண்டுமே. இப்படி ஒருவராகிலும் நினைக்கவுங் காணோம். ஆதலால், பிராமணத்துவம் சரீரத்திலும் இல்லை என்பதே துணிவு.*

## ௪. பிரமஞானவிசேஷத்தினால் பிராமணத்துவம் இல்லை என்பது.

ஒருவன் பிரமஞானத்தினாலே பிராமணனாதல்கூடாது. கூடுமெனில் பிரமஞானம்பெற்றசூத்திரரும், பிராமணராவார்கள். சூத்திரர் அநேகர் வேதம், வியாகரணம், மீமாம்சை, சாங்கியம், வைசேஷிகம், சோதிடம், வைத்தியம் முதலிய சாஸ்திரங்களிலே மகா நிபுணராகியும், பிராமணராதல் காணோம்: ஆதலால், பிரமஞானமும் ஒருவனைப் பிராமணனாக்காது.

## ௫. சமயாசாரவிசேஷத்தினால் பிராமணத்துவம் இல்லை என்பது.

சமயாசாரத்தினால் ஒருவன் பிராமணனாதல்கூடாது. கூடுமாகில் சமயாசாரமுள்ள சூத்திரர் எல்லாம் பிராமணராகவேண்டும். கூத்தர், சண்டாளர், வலையர், கேலிக்காரர்முதலிய அநேகர் நானாவிதமான சமயாசாரங்களையுடையவர்களாய் மேன்மைபெற்றும், பிராமணராய்விடக் காணோம்: ஆதலால், சமயாசாரமும் ஒருவனைப் பிராமணனாக்குதல் கூடாதென்பது சத்தியம்.

## ௬. தொழில்விசேஷத்தினால் பிராமணத்துவம் இல்லை என்பது.

தொழிலினால் ஒருவன் பிராமணனாதல்கூடாது. க்ஷத்திரிய வைசிய சூத்திரவருணத்தாரும் ஓதல், ஓதுவித்தல், வேட்

---

* அக்கினி அவிய அதிலே தோன்றிய புகையும் அகன்றுபோவதுபோல, காரணங்கெடக் காரியமும் ஒழிந்துபோமென்கிற எண்ணத்தைச்சார்ந்து இந்தநியாயம் எடுத்தார். விசாரிக்குமிடத்து, இது பூதசாத்திரத்துக்கும் நியாயசாத்திரத்துக்கும் மாறுபடும். இதற்குத் திருஷ்டாந்தம் எப்படியெனில், அடக்கமின்மை ஒழிந்துபோக அவ்வடக்கமின்மையினால் உண்டானவியாதியுந் தரித்திரமும் ஒழிந்துபோமா? போகா. அதுபோல, ஒருவன்தே

டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னுந் தொழில்களையும், பின்னும் பல தொழில்களையும் அனுஷ்டிக்கிறார்களே. அதினிமித்தம் நீங்கள் அவர்களைப் பிராமணரென்றுசொல்லக்காணோம். ஆதலால் இவ்விதமானதொழில்களும் ஒருவனைப் பிராமணன் ஆக்கக் கூடாதென்பதே துணிவு.

## எ. வேதாத்தியயனவிசேஷத்தினால் பிராமணத்துவம் இல்லை என்பது.

வேதாத்தியயனம் ஒருவனைப் பிராமணன் ஆக்கக் கூடாது. இலங்காபுரிக்கு இராசனாயிருந்த இராவணன் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நாலு வேதங்களையும் அத்தியயனம்பண்ணினான்; அவனுடைய பிரசைகளாகிய சமஸ்தராட்சதருடைய கிருகங்களிலும் வேதாத்தியயனம் நடந்தது: அவர்கள் பிராமணரானார்களா, இல்லையே. ஆதலால், வேதாத்தியயனத்தினாலும் ஒருவன் பிராமணனாதல் கூடாதென்று தோன்றுகின்றது.

இப்படிப் பிராமணத்துவம் சாத்திரஞானத்தினாலுமல்ல, சமஸ்காரத்தினாலுமல்ல, சாதியினாலுமல்ல, பிறப்பினாலுமல்ல, வேதாத்தியயனத்தினாலுமல்ல, கிரியானுஷ்டானத்தினாலுமல்லவென்றால், வேறெதினாலே பிராமணத்துவம் உண்டாகுகின்றது. சகலபாவங்களையும் விட்டுநீங்கி, முல்லைப் புஷ்பம், சந்திரன் முதலியவற்றைப்போலச் சுத்தமாய்விளங்குவதே பிராமணத்துவம். இதிலிருந்து பலி, விரதம், தவம், நியமாசாரம், உபவாசம், தானம், சமம், தமம், அடக்கம் முதலியவைகள் தோன்றும்.*

---

ய்த நல்வினைதீவினைகளும் நல்லாலோசனை துராலோசனைகளும், அவன் நிலைபிரிந்தபோதும், இறந்தபோதும், அவனிடத்திலாகிலும், அவன் பிள்ளைகளிடத்திலாகிலும், அவன் சுற்றத்தாரிடத்திலாகிலும் பலிக்கும்.

*இந்தப்பயிற்சிகள் பிராமணத்துவத்துக்குரிய மெய்ப்பத்தியும் சற்குணமுமுள்ள இருதயமில்லாமல்செய்யவும், நெடுங்காலம் பயிலவுங் கூடியவைகளாயிருந்தாலும் தாமே பிராமணத்துவத்தைநிலைப்படுத்தவல்லவைகளல்ல. ஆகிலும், துர்க்குணங்களைக்கெடுத்துச் சற்குணங்களையும் பத்தியையும்வருவிப்பதற்கேதுவாதலால், அதற்கு வழிகாட்டக் கூடும். சொல்லப்பட்ட காரியம் முழுமையும்மெய்மையாகாது; சிலவழுக்களோடு கூடியிருந்தாலும் மெய்மையுஞ் சிறிதுண்டு. தெய்வசகாயமின்றி மனுஷனுடைய முயற்சி மாத்திரம் அவனுடைய துர்க்குணத்தை

இதற்கு வேதப்பிரமாணம் "நிர்மமதை, நிரகங்காரம், நிர்ச்சங்கம், இராகத்துவேஷம் முதலியவைகளில்லாமையென்னும் இந்த விசேஷங்களையுடையவன் எவனோ அவனே பிராமணனென்றுதேவரும் மதிப்பார்கள் என்பது சொல்லப்பட்டிருக்கின்றது." இன்னும் பலசாஸ்திரங்களிலே "சத்தியம், தவம், இந்திரியநிக்கிரகம், சீவகாருணியம் என்னும் இவைகளே பிராமணனுக்குரியலட்சணம்" என்றும், "இந்தச் சத்தியம், தவம், இந்திரியநிக்கிரகம், சீவகாருணியம் என்னும் இவைகளில்லாதவன் எவனோ அவனே சண்டாளன், அவனே பறையன், அவனே நீசன்" என்றும், "தேவராகிலும், மனுஷராகிலும், மிருகமாகிலும், ஸ்திரீபோகத்தில் அமிழ்ந்தாதவர்கள் எவர்களோ அவர்களே விப்பிரர், அவர்களே பிராமணர், அவர்களே இருபிறப்பாளர்" என்றுஞ் சொல்லப்படுகின்றது.

இன்னும் "தேவர்கள் சாதிபேதம் பார்ப்பதில்லை. யாவருக்கும் உபகாரஞ் செய்யத்தக்க சற்குணமே பிரதானம். அதையுடையவன் சண்டாளனாயினும், அவனே பிராமணனென மதிக்கிறார்கள்" என்று வெள்ளி என்னும் கிரகத்தின் அதிபதியும் அசுரருக்குந் தைத்திரியருக்குங் குருவுமாகிய சுக்கிரபகவான் சொல்லுகிறார்.

இந்தப்பிரமாணங்கள் எல்லாவற்றினாலும், இவ்விய சற்குணங்களினாலேயொழிய ஒருவன்பிறப்பினாலாகிலும், சீவனினாலாகிலும், சரீரத்தினாலாகிலும், பிரமஞானத்தினாலாகிலும், சமயாசாரத்தினாலாகிலும், தொழிலினாலாகிலும், வேதாத்தியயனத்தினாலாகிலும் பிராமணனாதல் கூடாதென்பது பிரத்தியட்சமாய் விளங்குகின்றது.

சந்நியாசம்* சூத்திரருக்கு விதிக்கப்படவில்லையென்றும்

---

முழுமையும் அடக்குவதற்குப் போதாது. மேற்சொல்லிய முயற்சிகளிலே சில அப்படிப் பட்டபலனுக்கு ஏதுவல்லதாயும் விரோதமாயும் இருக்கிறது. இந்த விதமான சமயத்தார் நல்லொழுக்கத்துக்கேற்க இயல்பான குணங்களைக் கிரமப்படுத்தாமல், அவைகளை முழுமையுங் கெடுக்கப்பார்க்கிறார்கள். மனுஷருடைய ஆத்துமங்களிலுள்ள துர்க்குணங்களுக்குச் சடப்பொருளே காரணமென்று பூர்வீகத்திலுள்ள கிரேக்கசாஸ்திரிகள் கொண்ட தப்பான கோட்பாட்டையே இவர்களும் சாதிக்கிறார்கள். நம்மிடத்திலுள்ள அநேக பாவக்குணங்கள் ஆத்துமத்திலுள்ளவைகளேயன்றிச் சரீரத்திலுள்ளவைகளல்லவென்பதற்கு நமது அறிவே சாட்சி.

* சந்நியாசமாவது, உலகவிஷயங்களிலே புலன்செலுத்தா

பிராமணருக்குத் தொண்டுசெய்துதிரிவதே அவர்களுக்குத் தருமம் என்றும், சூத்திரர் கடைசியில் எண்ணப்பட்டிருக்கிறார்களே, அதினால், நான்கு வருணத்தாருக்குள்ளும் அவர்களே இழிந்தவர்கள் என்றும் பேசுகிறீர்கள். அப்படியானால், இந்திரனும் நீசனென்றே கணிக்கப்படவேண்டும். வியாகரணத்திலே பதக்கிரமத்தில் சுவ சுப மகோ என்னுஞ் சூத்திரத்தில் இந்திரன்பெயரான மகோ என்னும் பதம் நாயின்பெயரும், மனுஷரின்பெயருமாகிய சுவ சுப என்னும் மற்றிரண்டுபதங்களுக்கும் பின்வருவதினால், நாயிலும் மனுஷனிலும் இந்திரன் இழிந்தவனோ. இப்படி ஒருவர் சொல்லக் கேட்டதுண்டா. வசனத்தொடர்ச்சிமாத்திரம் தோஷங் கற்பிப்பதுண்டாகில், உமாமகேஸவரர் தந்தோஷ்டம் என்னும் வசனங்களில், உமையென்னும் பதத்திற்குப் பின் மகேஸ்வரரென்னும் பதம்வந்ததினால் மகேஸ்வரர் தமது சத்தியாகிய உமையில் இழிந்தவரென்றும், தந்தமென்னும்பதத்திற்குப் பின் ஒஷ்டமென்னும்பதம் வந்ததினால் ஒஷ்டம் தந்தத்தின்பின் தோன்றியதென்றும் சொல்லத்துணியலாமா? இவைபோன்ற வசனஞ் சந்தவின்பப்பொருட்டு எழுத்துமுறைப்படி சமாசம்செய்யத் தொடுக்கப்பட்டனவேயன்றி இழிவு உயர்வு நோக்கி முன்பின்னாகத் தொடுக்கப்பட்டனவல்ல. இப்படியே பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர * என்னும் நாலுவருணப்பிரயோகமும் பதசமாசநிமித்தம் வழங்கிவருகின்றது. ஆதலால், சூத்திரர் நீசவருணமாதலின் பிராமணருக்குத் தொண்டுசெய்வதே அவர்களுக்குத் தருமம் என்று நீங்கள் சாதிப்பது தகாது.

மநுதருமசாஸ்திரத்தில் "சூத்திரஸ்திரியின் பாலைக்குடித்த பிராமணனுக்கும் சூத்திரஸ்திரியினுடைய சுவாசம்பட்ட பிராமணனுக்கும் பிராயச்சித்தமில்லை. † இப்படியால் சூத்திரஸ்திரியினிடத்திற் பிறந்த மனுஷனுக்குப் பிராய

---

மல் சரீரத்தைவாட்டி, இதமகிதமின்றி, யோகஞ்சாதித்துப் பின் உலகமாயைகளைநீங்கி, பேரின்பமெளனநிலைபெற்றுப் பிரம்மத்தில் ஒடுங்கும்பொருட்டு, முற்றத்துறத்தலாம்.

* இத்தொடர்மொழி சந்தவின்பம்பயக்கும்பொருட்டு, ஆதியிலே இப்படிக் கிரமப்படுத்தப்பட்டது. சமஸ்கிர்தவியாகரணிகள் பெரும்பாலும் வசனங்களில் இன்னிசையையேயன்றி விளக்கத்தையும் யுத்திநியாயத்தையும் நாடார்கள்.

† இவ்விதமாகியகுற்றத்துக்குப்பிராயச்சித்தமில்லை. ஆதலால், இக்குற்றஞ்செய்தவன் ஒருகாலமும் சுத்தப்பிராமணரோடு சேர்க்கப்படான்.

ச்சித்தமுண்டா?" என்றும் "ஒருமாசபரியந்தஞ் சூத்திரஸ்திரியினிடத்திலே போசனபானம்பண்ணின பிராமணன் தன் ஆயுள்பரியந்தஞ் சூத்திரனாகி மரணம்அடைந்தபின் நாயாகப் பிறப்பான்" என்றும் "சூத்திரஸ்திரியைத் தனக்குத் தாசியாயாவது, மனைவியாயாவது வைத்திருந்த பிராமணன் தன் பிதிர்களுடைய சங்கத்தினின்றுந் தள்ளுண்டு தன் பிதிர்கள் அடைந்த சுவர்க்கமுதலிய பதங்களை அடையாமல் ரௌரவ நரகத்தை அடைவான்" என்றுஞ்சொல்லப்பட்டிருக்கின்றது. இவ் வசனங்களினாலே பிராமணவிசேஷம் இன்னதென்று அறியலாம். வேறு சில இடங்களில் சூத்திரன் பிராமணனாகலாம் என்றும் மநுவே சொல்லியிருக்கிறார். அது என்னகாரணத்தினாலென்பதற்குப் பிரமாணம்.

"காதாவென்னும் மகாமுனிவர் ஆரணியகர்ப்பமாகிய யாக்காஷிடத்தில் உற்பத்தியானார். வசிஷ்டமகாமுனிவர் இந்திரலோகத்திலே நடனஸ்திரியாகிய உருப்பசியிடத்திலே பிறந்தார். சிருங்க முனிவர் மானினிடத்தில் உதித்தார். விசுவாமித்திரமுனிவர் சண்டாளஸ்திரியினிடத்திலே தோன்றினார். தேவரிஷியாகிய நாரதமுனிவர் வெற்றிலைவிற்கும் ஒரு சூத்திரஸ்திரியினிடத்தில் அவதரித்தார். இவர்கள் எல்லாருந் தபோமகிமையினாலே பிராமணராய்விட்டார்கள். ஆதலால், பிராமணத்துவத்துக்குப் பிறப்புவிசேஷம்அவசியமல்ல. பிறப்பினால் என்னபிரயோசனம்? ஐம்புலன்களைஅடக்கி அதிதுராசைகளை * நீக்கினவனே பஞ்சானகனென்றும், † தவஞ்செய்பவனே தவசியென்றும், பிரமசரிய ‡ விரதம்அனுஷ்டிப்பவனேபிராமணன்" என்றும், மாநவதரும

* துர்க்குணங்களையும் ஆசைகளையும் அடக்கிய சந்நியாசி.

† இந்தச்சொல்லுத் தாழ்ந்த தேசங்களிலே தெரியவராது. பஞ்சானகன் எனினும் பஞ்சாதிதிஎனினும் ஒக்கும். பஞ்சாதிதியாவான் விஸராந்தி, சாகரம், நைமிசம், பிரயாகம், புட்கரம், என்னும் பஞ்சஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்கிறவன். இப்படி நெடுங்காலம் பத்தியுடன் யாத்திரைசெய்துவருவதினால், ஐம்புலன்களையும் அகங்காரத்தையும் அடக்கிக்கொள்ளலாமென்று துணிகிறார்கள்.

‡ இதற்கு வேதங்களை அநுசரிக்கிறவன் என்பது பொருள். பிரம்மஎன்பதுவேதம், ஆசாரிஎன்பது அநுசரிக்கிறவன். பிராமணனென்பதற்குப் பொருள் வைதீகமார்க்கத்தவன்; வேதத்திற்சொல்லப்பட்டசமயாசாரங்களையும், விதிகளையும், போதனைகளையும், கைக்கொள்ளுகிறவன்.

நூலிலே சொல்லப்படுகின்றது. மேலேகூறிய திவ்விய முனிவரில் ஒருவரும் பிராமணபுத்திரர் அல்ல ; ஆகிலும், யாவரும் அவர்களைப் பிராமணரென்றேமதிக்கிறார்கள். வேறோரிடத்தில் "நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவனே பிராமணன்" என்று சொல்லப்படுகின்றது. ஆதலால், பிறப்புவிசேஷத்தினாலேபிராமணத்துவம்இல்லை. வேறோரிடத்தில்"ஒழுக்கமேபிரதானமன்றிப் பிறப்பும், குலமும்என்னசெய்யும்" என்றுசொல்லப்படுகின்றது. வேறோரிடத்தில் நீச குலத்திலேபிறந்த அநேகர் நல்லொழுக்கத்தினாலும், சமைதமைகளினாலுஞ் சுவர்க்கம் அடைந்தார்கள் என்றுஞ் சொல்லப்படுகின்றது. முன் சொல்லப்பட்ட நாரதர், வியாசர், வசிஷ்டர், சிருங்கர், விசுவாமித்திரர் முதலிய முனிவர்கள் யாவர்? அவர்கள் நீசகுலத்திற் பிறந்தவர்கள் அல்லவா? அப்படியிருந்தும் பிராமணரென்றே மதிக்கப்படுகிறார்கள். இந்தச் சாஸ்திரப்பிரமாணங்களினால் ஒருவன் பிறப்பினாலேபிராமணனாதல் கூடாதென்பது தெளிவாய்விளங்குகின்றது. சூத்திரர் அநேகர் பிராமணரானார்கள் என்னும் பிரமாணத்தினாலே சாதிபேதஞ் சுருதி, யுத்தி, இரண்டிற்கும் ஒவ்வாதென்பதுஞ் சத்தியம்.

பிரம்மாவின் முகத்திலே நின்று பிராமணரும், தோளிலே நின்று க்ஷத்திரியரும், தொடையிலே நின்று வைசியரும், பாதத்திலே நின்று சூத்திரருந் தோன்றினார்களென்று சொல்லுகிறீர்கள். பிராமணர் பிரம்மாவின் முகத்திலிருந்து தோன்றினவர்களாகில், அவர்கள் ஒரே வருணத்தவர்களாயே இருப்பதன்றிப் பலவருணத்தவர்களாய் இருக்கக் கூடாது. வலையருக்குள்ளும், வண்ணாருக்குள்ளும், சண்டாளருக்குள்ளும் பிராமணர் தோன்றியிருக்கிறார்களே, அவர்களும் பிராமணத்துவத்துக்குரிய சௌளம், முஞ்சிபந்தனம், சமுஸ்காரம், தர்ககாண்டம் முதலியவைகளை அடைய யோக்கியர்களாய்ப் பிராமணர் என்றே பெயர்பெற்றிருந்தார்கள். இப்படியே பிராமணரைப்போல க்ஷத்திரியர் முதலிய வருணத்தாரும் பிறவருணத்தினின்று தோன்றுகிறார்கள். ஆதலால், எல்லாருக்கும் ஒரேவருணமன்றி நாலுவருணம் இல்லை. பிரம்மாவாகிய ஒருவரிடத்தே நான்குவருணந் தோன்றுவதெப்படி?

ஒருவனுக்கு ஒரேஸ்திரியினிடத்திலேபிறந்த நாலு புத்திரருக்குள் ஒருவனைப் பிராமணனென்றும், ஒருவனை க்ஷத்

திரியனென்றும், ஒருவனை வைசியனென்றும், மற்றவனைச் சூத்திரனென்றுஞ்சொல்லக்கூடுமோ? அந்த நால்வரும் ஒருவனுக்கு ஒரே ஸ்திரியினிடத்திலே பிறந்தவர்களாதலால், அப்படிச்சொல்லக்கூடாதே. இப்படி இருக்கப் பிரம்மாவென்னும் ஒரே பிதாவினிடத்திற் பிறந்த சமபுத்திரர்கள் நால்வரை நாலுவருணத்தார் என்று பிரிப்பதெப்படி?

அன்றியும் இஷபம், யானை, நாய், மான், சிங்கம், புலி முதலிய மிருகங்களுக்குள்ளே காலிலே விசேஷம் இருப்பதினால், இஷபத்தின் காலுக்கும், யானையின் காலுக்கும், குதிரையின் காலுக்கும், மானின் காலுக்கும், சிங்கத்தின் காலுக்கும், புலியின் காலுக்கும் பேதம் அறிந்துசொல்லலாமே. இதுபோல நாலுவருணத்தாருக்குள்ளே இது பிராமணன் கால், இது க்ஷத்திரியன் கால், இது வைசியன் கால், இது சூத்திரன்கால் என்று அறிந்து சொல்ல முடியாதே. எல்லாரும் ஒரேவிதமான காலையுடையவர்களாய் இருப்பதினால் இவர்கள் ஒரேவருணத்தார்அன்றி நான்குவருணத்தார் அல்லர். இஷபம், எருமை, குதிரை, யானை, கழுதை, குரங்கு, வெள்ளாடு, செம்மறியாடு முதலிய மிருகங்களின் இலிங்கம், வன்னம், ரூபம், மலம், மூத்திரம், கந்தம், தொனி முதலியவைகள் எல்லாம் வெவ்வேறு பேதமாய் இருக்கின்றன. பிராமணர் முதலிய நான்குவருணத்தாருக்குள்ளே இப்படி ஒரு வித்தியாசமுங் காணவில்லையே. ஆதலால், ஒன்றுக்கொன்று விகற்பமில்லாத இந்தச் சீவர்கள் ஒரே வருணத்தார் அன்றி நான்குவருணத்தார் அல்லர்.

இப்படியே பட்சிகளைப் பார்க்குமிடத்தில், அன்னம், புரு, கிளி, குக்குருவான், மயில் முதலிய பட்சிகள் எல்லாம் ரூபத்திலும், நிறத்திலும், இறகிலும், அலகிலும் ஒன்றுக்கொன்று வேற்றுமையாய் இருக்கின்றன. மனுஷருக்குள்ளோ* அப்படி ஒரு வேற்றுமையும்இல்லை. ஆதலால், சகல

---

* மனுஷருக்குள்ளும், தோல் சரீரத்தினுயரம் முதலானவைகளிலே சில வேற்றுமை உண்டு. இவ்வேறுபாடுகள் விலங்குகளுக்குள்ள பேதங்கள்போல் அல்ல. இவைகள் எல்லாம் நிலம், உடை, போசனம், தொழில் முதலானவைகளால் வருஞ்சொற்பபேதங்கள்; இன்னும் இவைகள் இடைக்கிடையே அவைகளினாலே விகாரப்படும். இவ்வகைப்பேதங்களுக்குரிய மிகவும் வேறுபாடான குணங்கள் பலவிதமாகிய மனுஷருக்குள்ளும் அவர்களுடைய உற்பத்திகாலந்தொடங்கி இருக்கின்றன.

மனுஷரும் ஒரே வருணத்தார் அன்றி நான்குவருணத்தார் அல்லரென்பது சத்தியம். இப்படியே விருட்சங்களுக்குள்ளும் அரசு, வகுளம், பலாசு, அசோகம், தமாலம், நாககேசரம், சிரிசம், சம்பகம் முதலிய அனைத்திற்கும் வேர், கோடு, பத்திரம், புஷ்பம், பழம், பட்டை, வித்து, ரசம், கந்தம் என்னும் இவைகளில் வேற்றுமை உண்டு. அதுபோல, மனுஷருக்குள்ளே பிராமணவருண முதலிய வருணங்களுக்குள் ஒரு வேற்றுமையையுங் காணவில்லையே; அவர்களுடைய தோல், மாமிசம், உதிரம், எலும்பு, சுக்கிலம், மலம், மூத்திரம், வன்னம்* முதலியவைகளில் சற்றாகிலும் ஒரு வேற்றுமையில்லை. கர்ப்பம், பிரசவம், இவைகளிலும் ஒரு வேற்றுமையையும் நாங்காணவில்லையே. ஆதலால், இவர்கள் எல்லாரும் ஒருவருணமேயன்றி நாலுவருணத்தார் அல்லரென்பது நிச்சயம்.

இன்னும் சுகதுக்கம், இன்பதுன்பம், மைதுனம், செநநம், மரணம், சீவியம், வியாபாரம், வியவகாரம், ஆசை, பயம், புத்தி, ஆகாரம், ஔஷதம் முதலியவைகள் எல்லாம் பிராமணருக்கு எப்படி இருக்கின்றனவோ அப்படியே க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், இவர்களுக்கும் இருக்கின்றன. ஆதலால் இவர்கள் எல்லாரும் ஒருவருணத்தாரன்றி நாலுவருணத்தார் அல்லரென்பது சத்தியம். †

இன்னும் ஒரே மரத்தில் தோன்றுங் கனிகள் எல்லாம் ஒருவகையேயன்றிப் பலவகை அல்ல. அத்தி, பலா முதலிய மரங்களிலே சில கனிகள் கொப்பிலும், சில கனிகள் கிளை

---

* நிறங்களிலுள்ள சொற்பவேற்றுமைகள் வெளிப்படையானபேதங்கள், யதார்த்தமானபேதங்களல்ல.

† ஷேக்ஸ்பீரென்னும்நாடகத்தலைவன்செய்த வெனிஸ்நகரவியாபாரிஎன்னும்நாடகத்திலே,ஷைலக்கென்னும்யூதன் "கடவுள் ஒரே இரத்தத்திலிருந்து மனுஷர் எல்லாரையும்தோன்றப்பண்ணினார்" என்னும் சத்தியத்தை உய்த்துணராமல், யூதர்கள் தங்கள் சுபாவத்தைப்போன்ற சுபாவத்தையுடையவர்களல்லரென்று அவர்களைவெறுத்த பெயர்க்கிறிஸ்தவர்களிடத்தில் மேல்வரும் நியாயத்தை எடுத்துப்பேசினான். அது எப்படியெனில்,

"யூதனுக்குக்கண்ணில்லையா? கிறிஸ்தவனைப்போல யூதனும் கைமுதலிய அவயவங்களையும், ஐம்புலன்களையும், பஞ்சேந்திரியங்களையும் உடையவனாயிருப்பதும், உணவினால் ஆதரிக்கப்படுவதும், எந்த ஆயுதங்களினாலும் குத்தப்படுவதும், வியாதிகளை அடைவதும், ஔஷதங்களினாலே சொஸ்தமாகப்

கனிலும், சில கனிகள் கவரிலும், சில கனிகள் அடியிலும் பழுத்தாலும், எல்லாம் ஒரே மரத்திலே பழுத்தபடியால் ஒரு இனமென்றே சொல்லப்படுவதன்றி, இது பிராமணப்பழம், இது க்ஷத்திரியப்பழம், இது வைசியப்பழம், இது சூத்திரப்பழம் என்று சொல்லப்படுவதில்லையே. வெவ்வேறிடங்களிலே பழுத்தபடியினால், அவைகளுக்கு ருசியில் ஏதாகிலும் பேதமுண்டா, இல்லையே. இவ்வண்ணமே மனுஷரும் ஒரே பிதாவினிடத்திலே தோன்றினபடியினால் அவர்களுக்குள்ளே யாதொரு பேதமும் இல்லை.

மேலும் பிராமணன் பிரம்மாவின் முகத்தினின்று தோன்றினானாகில், பிராமணத்தி எங்கே தோன்றினாள்? அவளும் முகத்திலே தோன்றினாள் என்பீர்களாகில், ஐயையோ, அவள் அவனுக்குச் சகோதரியாமே. அப்படியானால் சமஸ்த மனுஷரும் மகாபாதகமென்றே அறுநியிடும் சகோதரிகமனமென்னுந் தோஷம் உண்டாமே! இதனால் நீங்கள் பிராமணத்துவமே சிரேஷ்டமென்று சாதிக்குஞ்சாதனை விருதாவாமே.

நாம் உண்மையாய் ஆராயுங்காலத்து, இந் நான்கு சாதி பேதமும் அவரவருக்குரிய தொழிற்பேதத்தினாலன்றிச் சென்மபேதத்தினால் உண்டானதல்லவென்பது சத்தியம். இவ்வண்ணமே வைசம்பாயனரென்னும் மகாமுனிவர் தருமபுத்திரர் வினவிய வினாக்களுக்கு உத்தரங்கொடுத்திருக்கிறார். அதை மகாபாரதத்தினின்றும் எடுத்துக்காட்டிய மேல்வரும் பிரமாணங்களிலே கண்டுகொள்க.

பாண்டுபுத்திரரும் வித்துவசிரோமணியுமாகிய தருமர், மகாபாரதஞ்செய்தவரும் ஆதியில் யசுர்வேதம்போதித்தவருமாகிய வைசம்பாயனமுனிவரைச் சமீபித்து இருகைகுவித்து வணங்கி "பிராமணரென்பவர்கள்யாவர்? பிராமணத்துவத்து

---

பெறுவதும், கோடைகாலத்திலே உஷ்டணத்தையும் மாரிகாலத்திலே சீதளத்தையும் அனுபவிப்பதும் இல்லையா? யூதனைக்குத்தினால் இரத்தம்சொரியாதா? அக்கிட்பாய்ச்சினால் சிரிக்கமாட்டானா? நஞ்சிட்டால் சாகானா? அநியாயஞ்செய்தால் பழிவாங்கானா? யூதன் மற்றைக்காரியங்களிலே கிறிஸ்தவனுக்குச்சமானமாயிருப்பானாகில், இதிலுஞ்சமானமாயிருக்கமாட்டானா? இப்படி மனுஷரெல்லாருக்கும் உரிய குணங்களைச் சார்ந்து இந்த யூதன் நியாயம்பேசினதுபோலச் சூத்திரனுந் தங்களைமேன்மைபாராட்டிக்கொள்ளுகிற மேலாகிய வருணத்தாரிடத்தில் நியாயம்பேசலாமே.

க்குரியஇலட்சணம் என்ன? இதை நான் அறியமிகவும்அபேட்சையாயிருக்கிறேன்,எனக்கருளிச்செய்யவேண்டும்" என்று கேட்க; வைசம்பாயனர் தருமரைநோக்கி, "பிராமணத்துவத்துக்குரிய இலட்சணம் ஐந்து. அவற்றுள் சாந்தம் முதலிய நற்குணங்கள் எவற்றையும் அடைந்து, அகங்காரம் காமம் முதலிய துர்க்குணங்கள்எவற்றையும்நீங்கி யாதொரு பிராணசேதமுஞ்செய்யாதிருப்பதே முதல் இலட்சணம். வழியிலாகிலும், வீட்டிலாகிலுந் தான்கண்ட பிறனுடைய பொருளை அபகரித்துக்கொள்ளாதிருப்பதே இரண்டாம் இலட்சணம். குரோதம், லோபம், மமதை, * சுயேச்சை † என்னும் இவைகளை நீங்கியிருப்பதே மூன்றும் இலட்சணம். தேவர், மனுஷர், மிருகம் என்னும் பேதங்களுக்குள் எங்கே பிறந்தாலும் சதாகாலமும் மைதுனத்திற்கு விலகிநிற்பதே நான்காம் இலட்சணம். சத்தியம், சுத்தம், இந்திரியநிக்கிரகம், சீவகாருணியம், தவம் என்னும் இவ்வைந்தையும் உடையவனாயிருப்பதே ஐந்தாம் இலட்சணம். தருமரே. இவ்வைந்து இலட்சணங்களையும் உடையவனே இருபிறப்பாளன், அவனேயதார்த்தமானபிராமணன், மற்றவர்கள்எல்லாரும் சூத்திரர். பிறப்பினாலாகிலும், கிரியையினாலாகிலும், ஒருவன் பிராமணனாதல் கூடாது. குந்தியின் புத்திரனே! சண்டாளனாயினும், தன்னிலைமைக்கேற்கத் தன் கடமைகளை நிறைவேற்றுவானாகில், அவனே பிராமணன். மகாராசாவே, ஆதி காலத்தில் இவ்வுலகத்திலுள்ள சமஸ்தரும்,

---

* இது உயர்திணைப்பொருள் அஃறிணைப்பொருள்களை எனதெனக்கருதுதலாகிய மமகாரத்தை ஒழித்துப் பொருள்தேடுதலிலும்,விஷயவின்பங்களை அநுபவித்தலிலும் விருப்பின்றி, என்னுடையது உன்னுடையது அவனுடையது என்னும் பகுப்பில்லாமல், மனைவி பிள்ளை முதலியசுற்றங்களை வெறுத்துத்தள்ளுதலாம். இதைச் சுருக்கமாகவெளிப்படுத்தில்; தேவபத்தியும் மோட்ச அபேட்சையும்உடையமென்றுபாவித்து, இதமகிதமின்றி இயல்பாயுள்ள சகலகுணங்களையும் பற்றுக்களையும் அடக்கி, மனோசலனமிறந்து சும்மாவிருத்தலாம். இந்தக்கோட்பாடு இந்துக்களுக்கும், புத்தருக்குஞ் சம்மதம். புத்தர் சொல்லும் உயிர்கெடுதலாகிய மகாநிர்வாணம், இந்துக்கள்சொல்லும் பாசபந்தம் நீங்குதலாகிய முத்தியுடன் ஒத்திருக்கின்றது.

† இது தானங்கள்வாங்காமலும் விவகாரங்களிலுந் தொழில்களிலும் சுற்றப்பற்றுக்களிலும் விருப்பில்லாமலுமிருத்தல்.

எகவருணத்தாராகவே இருந்தார்கள். பின் வரவரக் கிரியா
பேதங்களினுலே நான்குவருணபேதமுண்டாயிற்று.

பின்னும், ஸ்திரியினிடத்தில் உற்பவிக்கும் சமஸ்தரும்,
செநநமரணங்களிலே சமமாயிருக்கிருர்கள். சகலரும் ம
ல மூத்திர விசர்க்கம்பண்ணுகிருர்கள். சகலரும் சமேந்தி
ரிய ஏகேந்திரியராயிருக்கிருர்கள். ஆதலால், சுசீலம், சகு
ணம், சுகிர்த்தியம் என்னுமிவைகளையுடையவனே பிராம
ணன். சூத்திரனென்னப்படுகிறவனிடத்திலும் சுசீல சற்
குணங்களிருந்தால் அவனும் பிராமணனுவான். செநநத்
திலுலே பிராமணனென்னப்படுகிறவனும் தனதுநிலைமை
க்கேற்ற கடமைகளை நிறைவேற்ருமல் துர்க்குணனுயிருப்
பானுகில், அவன் சூத்திரரிலும் நீசனுவான்.

தருமரே, சூத்திரனுயினும் பஞ்சேந்திரியமாகிய கடலை
க்கடந்தவன் பிராமணனைப்போலத் தானங்களைப்பெறயோ
க்கியனுவான். மகாராசனே, சாதியையல்ல, யாவருக்கும் ந
ன்மையை விளைவிக்கும்சற்குணத்தையேமேன்மைப்படுத்த
வேண்டும். சற்குணத்தைநாட்டிப் பிறருக்கு நன்மைசெய்து
அல்லும்பகலுஞ் சற்கிரியைகளைப்பண்ணும்அவனையே தே
வர்களும் பிராமணனென்று மதிக்கிருர்கள். இல்லாச்சிரம
த்தைவெறுத்து முத்திநெறியைநாடிக் காமாதிகளுக்கு அக
ப்படாமலிருப்பவர்களே பிராமணர். பிராணசேதஞ்செ
ய்யாமலும், உலோபமில்லாமலும், செய்யத்தகாதசெய்கைக
ளைச் செய்யாமலும், இராகத்துவேஷம் முதலிய துர்க்குண
ங்களை அடையாமலும்இருப்பதே பிராமணர்களுக்குரிய இ
லட்சணம். சமம், தயை, தமம், தானம், சத்தியம், சுத்தம், சு
ருதி, ஞானம், பிரமஞானம், வித்தைஞானம் என்னுமிவை
களே சத்தியமாகிய பிராமணத்துவத்துக்குரிய இலட்சணம்.
தருமரே, காயத்திரியேயன்றி வேருென்றும் அறியாதி
ருந்தாலும், சதுர்வேதங்களிலே ஒன்றையுங் கருதாதிருந்தா
லும், எந்தெந்தப் போசனங்களைப் புசித்தாலும், எந்தெந்த
வியவகாரங்களில் உட்பட்டாலும், இந்திரியதமனஞ்செய்
து மேற்சொல்லிய சற்குண சற்கிரியைகளைக் கொண்டிருப்
பவனே இருபிறப்பாளன். பிரமசாரி* ஒரு இராமாத்திரம்

---

* பிரமசாரி, மகாவிரதங்களை அனுஷடித்து, உறைத்த பத்தி
யும் பரிசுத்தமுமுள்ளவனுகி, வேதங்களை இடைவிடாமல் ஓதி
ச் சமஸ்தமாகிய தீமைகளையும் நீங்கி ஏகாக்கிரசிந்தையுடனே
தன்னுசாரியனுடைய வேதபோதனைகளுக்கு அமைந்துநடக்க
வேண்டும் என்று மானவதருமசாஸ்திரத்திலே சொல்லப்பட்டி
ருக்கின்றது.

அனுஷ்டிக்கும் ஆசாரத்தினுல் அவன் பெறும் ஆநந்தத்தைப் பிறர் ஆயிரம் பவிதானங்களாலும் பெற முடியாதே.

நான்கு வேதங்களையும் அப்பியாசித்துத் தீர்த்தயாத்திரை பண்ணிச் சீவன்முத்தனுய்த் தருமாசாரங்களை அனுஷ்டிப்பவன்எவனே அவனையே யதார்த்தமான பிராமணனென்று தேவர்களும் மதிக்கிருர்கள். மனேவாக்குக் காயங்களினுல் யாதொரு பாவமுஞ் செய்யாமலும், பிற உயிருக்குத் தீமை விளைவியாமலும் இருக்கும் நன்னிலையில் நிற்பவனே பிறப்பற்றுப் பிரமசொருபமாவான்" என்றருளிச்செய்தார்.

தங்களைத் தாமே பிராமணரென்று சொல்லித் திரிபவர்களுடைய அகத்திருளாகிய அஞ்ஞானத்தை ஒட்டும்படி மேலேகூறிய வாக்கியங்களைச் சத்தியமென்றுகண்டால், கிரகித்துக்கொள்ளுங்கள்; அல்லவென்ருல் தள்ளிவிடுங்கள்.

பரமாசாரியராகிய அசுவகோசருடைய சீர்பாதசமீபத்தில் இருந்தெழுதிய கிரந்தம் இது.

வச்சிரசூசி சமாப்திபெற்றது.